# TACTV

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்

**சுற்றறிக்கை**

கடித எண் 8056/2017 நாள் : 16.02.2018

| | | |
|---|---|---|
| பொருள் : | டிஜிட்டல் ஒளிபரப்பு – தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், - டிஜிட்டல் ஒளிபரப்பில் பிற மொழி சேனல்களை ஒளிபரப்புவது – கூடுதல் கட்டணம் குறித்து – தகவல் தெரிவித்தல் – சம்மந்தமாக | |
| பார்வை : | 1 | இயக்குநர் குழுக் கூட்டம் எண் 64 நாள் 22.12.2017 |

........

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தன்னுடைய டிஜிட்டல் சேவையை 01.09.2017 ல் துவங்கி தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தி வருகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. சில பகுதிகளில் டிஜிட்டல் ஒளிபரப்பில் பிற மொழி சேனல்கள் ஒளிபரப்ப கோரி பொது மக்களிடமிருந்தும் உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாகவும், கோரிக்கைகள் வரப்பெற்றன. இந்த கோரிக்கைகள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன இயக்குநர் குழுக் கூட்டத்தின் முன் வைக்கப்பட்டு இயக்குநர் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டு கீழ்காணும் பிற மொழி சேனல்கள் கீழ்க்காணும் விபரப்படி சந்தா கட்டணமாக செலுத்தும் சந்தாதாரர்களுக்கு வழங்க முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சேனல் சந்தா கட்டண விபரம்**

| வ.எண் | சேனல் பெயர் | சந்தாதாரர் கட்டணத் தொகை (மாதம் ஒன்றுக்கு ரூ. + GST) |
|---|---|---|
| 1 | ஜெமினி டிவி | 5.63 |
| 2 | ஜெமினி காமெடி | 3.38 |
| 3 | உதயா டிவி | 6.17 |
| 4 | உதயா காமெடி | 7.75 |
| 5 | சின்டு டிவி | 6.62 |
| 6 | குஷி டிவி | 6.62 |
| 7 | உதயா மூவிஸ் | 7.47 |
| 8 | ஜெமினி மியூசிக் | 4.15 |
| 9 | ஜெமினி மூவிஸ் | 8.64 |
| 10 | உதயா மியூசிக் | 4.15 |
| 11 | சூர்யா டிவி | 6.17 |
| 12 | சூர்யா மூவிஸ் | 8.64 |
| 13 | ஜெமினி லைப் | 5.67 |

**உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் SMS Login-ல் பிற மொழிச்சேனல்களை செயலாக்கம் செய்வதற்கான வழிமுறைகள்**

1. **SMS Login-ல் உள்ளீடு செய்தல்** - SMS Login-ல் உள்ளூர் கேபிள் ஆபரேட்டர் தனக்கென வழங்கப்பட்ட User Name and Password ஆகியவற்றை பயன்படுத்தி உள்ளீடு செய்தல் வேண்டும்
2. **சந்தாதாரரை தேர்வு செய்தல்** - உள்ளூர் கேபிள் ஆபரேட்டர் "Search" பகுதியில் எந்த சந்தாதாரர் பிறமொழிச்சேனலை கோருகிறாரோ அவருக்கு வழங்கப்பட்ட செட்டாப் பாக்ஸ் எண்ணை உள்ளீடு செய்து தேர்வு செய்தல் வேண்டும்




3. **ADD SERVICE** – உள்ளூர் கேபிள் ஆபரேட்டர் சந்தாதாரருக்கு தொகுப்பை (Package) தேர்வு செய்தலைப் போன்றே பிற மொழிச்சேனலை தேர்வு செய்வதற்கும் ADD SERVICE என்ற பட்டனை கிளிக் செய்தல் வேண்டும்.



4. **பிற மொழிச்சேனலை தேர்வு செய்தல்** - ADD SERVICE பட்டனை கிளிக் செய்த பிறகு வெளிப்படும் திரையில் தொகுப்பை (Package) தேர்வு செய்தலைப் போன்றே SERVICE என்ற பட்டனை கிளிக் செய்யும்போது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் ஒளிபரப்பப்படும் பிற மொழி சேனல்களுக்கான தொகுப்புகள் (Packages) வரிசைபடுத்தப்படும். சந்தாதாரர் எந்த பிற மொழிச் சேனலை தனக்கு செயலாக்கம் செய்யும்படி கோரினாரோ மேற்படி பிற மொழிச்சேனலை தேர்வு செய்து அருகில் உள்ள SAVE என்கிற பட்டனை கிளிக் செய்தல் வேண்டும்.



5. பிற மொழிச்சேனலுக்கான மாதாந்திர சந்தா தொகை ஏற்கனவே எவ்வாறு தொகுப்பு (Package) சேனல்களுக்கு கணக்கீடு செய்யப்படுகிறதோ அதை போன்றே கணக்கீடு செய்யப்படும்.

மேற்படி விபரத்தினை பிற மொழி சேனல்கள் விரும்பும் சம்மந்தப்பட்ட சந்தாதார்களுக்கு தெரிவித்து, அவர்களின் ஒப்புதல் பெற்று கேபிள் ஆபரேட்டர்களின் Login-ல் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட செட்டாப் பாக்ஸை தேர்வு செய்து, தேவைபடும் பிற மொழி சேனல்களை பதிவு செய்து சந்தாதாரர்களின் விருப்பபடி ஒளிபரப்பு சேவை செய்யுமாறு உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-
மேலாண்மை இயக்குநர்

பெறுதல்

அனைத்து கேபிள் ஆபரேட்டர்கள்,
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்.

நகல்

அனைத்து மாவட்ட துணை மேலாளர்கள்,
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்.

//உ.நு.உ.ப//

துணை ஆட்சியர்